**Judicial Form No-53**
**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 4, THOOTHUKUDI.**

**Case No CC 818 / 2022**
**Prosecution Witness –PW 8, LW11**

| Name: | உமா மகேஸ்வரி | Caste: | |
|---|---|---|---|
| Father's Name : | மகாராஜன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | தூத்துக்குடி | Age: | 40 |

**(A1, A2 present. )**

**Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w 35,36 of Criminal rules of practice 2019. 03.10.2024**

**சாட்சி நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**

**முதல்விசாரணை :**

1. நான் தற்சமயம் தென்காசி மாவட்டம் பாவூர் சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 06.06.2019 ஆம் தேதி 18.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த நான் திரு. ஆனந்த் ஜேசுராஜ் சாலமோன் த/பெ. தனராஜ் , மில் ரோடு , நாசரேத் , தூத்துக்குடி என்பவர் ஏற்கனவே தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த மனுவை பெற்று முதல் கட்ட விசாரணை மேற்கொண்டதில் குற்றம் புலனானதால் தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண். 10 / 2019 ச/பி 406, 420 இதச ன் படி வழக்கு பதிவு செய்தேன். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. வாதியின் புகார் மனுவையும் , அசல் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து தூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் . 3 அவர்களுக்கு அனுப்பினேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பினேன். அன்றைய தினமே சாட்சி திரு . ஆனந்த் ஜேசுராஜ் சாலமோன் என்பவரை விசாரித்து குவிமுச 161 (3) ன் படி வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. கடந்த 11.06.2019 ஆம் தேதி வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை பெறுவதற்காக தூத்துக்குடி சார் பதிவாளர் இணைப்பு 1 அவர்களுக்கு வேண்டுதல் விண்ணப்பம் அனுப்பி வைத்தேன். கடந்த 24.06.2019 அன்று எனக்கு திருநெல்வேலி

மாவட்டத்திற்கு பணி இடமாறுதல் அடைந்ததால் வழக்கு கோப்பினை நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் சார்பாக குறுக்கு விசாரணை:</u>**

1. அ.சா.1 புகார் மனுவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் அளித்த புகார் மனு 18.05.2018 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . முதல் தகவல் அறிக்கையில் தகவல் கிடைத்த நாள்ஆனது 06.06.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. முதல் தகவல் அறிக்கையில் குற்ற நிகழ்வு நாள் 06.09.2013 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . முதல் தகவல் அறிக்கையில் 6 வருடங்களுக்கு மேலான காலதாமதம் குறித்து எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

3. அ.சா.1 புகார் மனுவில் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மூலமாக முத்தையாபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளது சம்மந்தமாக விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்யவில்லை.

4. அ.சா.1 புகார் மனுவில் 06.09.2013 இல் இரண்டாம் எதிரி மனுதாரரிடம் ரூ. 3 லட்சம் சார் பதிவாளர் அலுவலகத்தில் செலுத்தினேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் அ.சா.1 புகார் மனுவில் 06.09.2013 இல் இரண்டாம் எதிரி மனுதாரரிடம் ரூ . 3 லட்சம்தூத்துக்குடி இணை 1 சார் பதிவாளர் அலுவலகத்தின் அருகில் வைத்து செலுத்தினேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. சம்பவ இடம் குறித்து பணம் செலுத்தியது விசயமாக முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ள சங்கதிகள் குறித்து விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்து சம்மந்தமாக பகவதியம்மாள் நான் தான் என்று கூறி மனுக்கள் எதுவும் பெறப்பட்டதா என்றால் மாவட்ட குற்றப்பிரிவில் புகார் எதுவும் நேரடியாக அளிக்கவில்லை.

6. அ.சா.1 யிடம் பணம் சம்மந்தமான ஆவணங்கள் பெறப்பட்டுள்ளதாக என்றால் அ.சா.1 புகார் மனுவில் ஏதும் குறிப்பிடவில்லை . சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 யிடம் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும் , அ.சா.1 யிடம் விசாரணை

மேற்கொள்ளவில்லை என்றாலும், எதிரிக்கு எதிராக ஒருதலைபட்சமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court,
interpreted/read over to the witness and
admitted by the deponent to be correct.

Sd/–V.C.Kuberrasundar,
Judicial Magistrate No.IV,
Thoothukudi.